## அழகான டாக்குமென்டரி!




காமிக்ஸ் படிக்கும் சிறுசுகளை கர்னாடக சங்கீதத்தின் பக்கம் இழுக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறார் லக்ஷ்மி தேவ்நாத். தங்கள் இசையின் மூலம் உலகை ஆண்ட இசை ஆளுமைகளின் வாழ்க்கையைப் படக் கதைகளாக வெளியிட்டு, பள்ளிக் குழந்தைகளிடம் எடுத்துச் செல்வதுதான் நோக்கம். Pictures of melody என்ற வரிசையில் எம்.எஸ்.சுப்புலட்சுமியின் வாழ்க்கை வரலாறு வெளிவந்து இருக்கிறது. இசை ராணியின் குழந்தைப் பருவத்தில் ஆரம்பித்து, பாட்டுப் பயணத்து அத்தியாயங்களை 24 பக்கங்களில் படக் கதையாக எளிதில் படித்து மகிழும் வண்ணம் வெளியிட்டு இருக்கிறார்கள். கடைசிப் பக்கத்தில் 2004-ல் எம்.எஸ். மறைவதைக் குறிப்பிட்டுவிட்டு, க்ளோஸ் - அப் படத்தில் 'ஷ்ரேயோ பூயாம்...' என்று அவர் பாடுவதைப் பார்க்கும்போது ஓர் அழகான டாக்குமென்டரி பார்த்த நிறைவு!